# OS No.34/2015, நாள்: 26.11.2019

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அரியபூபதி | வயது | : 61 |
| தந்தை பெயர் | : ஆறுமுககவுண்டர் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : புளியம்பட்டி | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

வா.சா.1 —— அரியபூபதி ஆஜர், முதன்மை விசாரணை :-

நான் இவ்வழக்கில் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர். மேற்படி நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை வாதிக்காக தாக்கல் செய்கிறேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். 31.07.1995ம் தேதியில் கிருஷ்ணகிரி கூடுதல் சிறப்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.59/1994ல் பிறப்பித்த தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வ.சா.ஆ.1 ஆகும். 28.2.1977ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்ட உரிமையியல் நீதமன்ற அ.வ.எண்.345/1975ல் பிறப்பித்த தீர்ப்பாணையின் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.2 ஆகும். 28.2.1977ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்ட உரிமையியல் நீதமன்ற அ.வ.எண்.345/1975ல் பிறப்பித்த தீர்ப்புரையின் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.3 ஆகும். 23.09.1997ம் தேதியிட்ட சிட்டாவின் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ,4 ஆகம். (2 முதல் 4 வரையான ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல் என்பதால் ஆட்சேபிக்கப்பட்டது) 20.03.2012ம் தேதியிட்ட அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆகும். 2.5.2006, 29.01.2008,

20.03.2012, 5.5.2015, 3.1.2000, 25.12.1995, 2.2.2002, 8.1.2009, 19.2.2001, 18.01.1994, 06.01.1995, 25.12.1995, 23.04.1995, 18.1.1994, 2.1.2006, 23.04.1995 மற்றும் 2.1.1985ம் தேதியில் வாதி செலுத்திய நிலவரி ரசீதுகள் வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.22 ஆகும். 19.06.2014ம் தேதியில் குத்தகை செலுத்தியதற்கான சலான் வா.சா.ஆ.23 ஆகும். வாதி எனக்கு எழுதிக்கொடுத்த பொது அதகிார பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.24 ஆகும். 25.11.2015ம் தேதியிட்ட வாதியின் காயச்சான்றிதழ் வா.சா.ஆ.25 ஆகும். 15.2.2018ம் தேதியில் குத்தகை செலுத்தியதற்கன சலான் வா.சா.ஆ.26 ஆகும் (வா.சா.ஆ.23 மற்றும் வா.சா.ஆ.26 ஆகிய ஆவணங்கள் எந்த நிலத்திற்கு செலுத்தப்பட்டது என்று குறிப்பிடாததால் ஆட்சேபிக்கப்பட்டது). தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.